## மாவட்ட உ ரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்
## கும்முடிப்பூண்டி

| | | |
|---|---|---|
| வழக்கு எண்: C.C. 62/2024 | காவல் நிலையம்: பாதிரிவேடு | |
| பெயர் : முருகவேல் | அ.சா.1 | நாள் : 17.11.2025 |

அரசு தரப்பு சாட்சியான அ.சா.1 என்பவரின் வாக்குமூலம் 1969 ஆம் ஆண்டின் 54 வது விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின் படி திரு.தமிழரசன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முருகவேல் | தாலுக்கா | : | -- |
| தந்தை பெயர் | : | முத்துசாமி | தொழில் | : | சோழவரம் சிறப்பு உதவி ஆய்வாளர் |
| கிராமம் | : | -- | வயது | : | 49 |

( எதிரி ஆஜர். எதிரியின் வழக்கறிஞர் ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் தற்போது சோழவரம் காவல் நிலையத்தில் குற்றப்பிரிவில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 11.10.2023 அன்று திருவள்ளூர் மாவட்ட எல்லைக்குட்பட்ட பாதிரிவேடு காவல் நிலையத்தில் நான் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது, பின்பு இரவு 10 மணிக்கு மாதர்பாக்கம் பஜாரில் வாகன தணிக்கையில் என்னுடன் தலைமை காவலர் 1449 கஜேந்திரன், மற்றும் தலைமை காவலர் 596 மணிகண்டன் ஆகியோர்களுடன் வாகன தணிக்கையில் இருந்தபோது, பாதிரிவேடிலிருந்து மாதர்பாக்கம் பஜாரை நோக்கி இருசக்கர வாகனத்தில் வந்த ஒரு ஆண் நபரை மடக்கி அவரிடம் வாகனத்திற்குண்டான ஆர்சி, லைசன்ஸ், இன்சூரன்ஸ் கேட்டபோது அவர் எங்களை பொது இடத்தில் ஒத்தா தேவிடியா பையா நீங்க என்ன பெரிய மயிரா உங்களுக்கு இதே வேலையா போச்சு என்று அசிங்கமாக பேசினார்.அவ்வாறு பேசக்கூடாது என கூறியும் அருகிலிருந்த சுமார் 3 அடி நீளமுள்ள உருட்டுகட்டையை காட்டி உங்களை அடித்து விடுவேன் என்று சொன்னார். சுதாரித்து அவரை பிடிக்க முயன்றபோது அவர் ஓட்டி வந்த இரு சக்கர வாகனமான Passion pro TN 18 AX 1147 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தில் சென்று விட்டார். அதன் பின்னர் அந்த வழியாக வந்த ஜெபக்குமார் மற்றும் ஏழுமலை இருவரிடமும் மேற்படி நபரை பற்றி விசாரிக்க அவர் என்எஸ் நகரை சேர்ந்தவர் எனவும், அவரது பெயர் தியாகு த/பெ. நாகராஜ் எனவும் தெரிவித்தனர். எனவே நாங்கள் அங்கிருந்து இரவு 11.30

மணிக்கு பாதிரிவேடு காவல் நிலையம் சென்று உதவி ஆய்வாளர் மாரிமுத்து அவர்களிடம் தனியறிக்கை அளித்து நடவடிக்கை எடுக்க வேண்டினேன். என்னிடம் காட்டப்படும் தனியறிக்கை நான் அளித்தது தான். (**அந்த தனியறிக்கை அதசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** அந்த நபரை என்னால் அடையாளம் காட்ட முடியும் ஆஜர் எதிரி தான் மேற்படி நபர் ஆவார். எதிரி பயன்படுத்திய உருடட்டு கட்டையை என்னால் அடையாளம் காட்ட முடியும். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்திலுள்ள உருட்டு கட்டை தான் அது ஆகும். (**அந்த உருட்டு கட்டை அடங்கிய புகைப்படம் அதசாஆ.2 ஆகவும், கைப்பற்றுதல் மகசரிலுள்ள உருட்டு கட்டை சா.பொ.1 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).** எதிரி பயன்படுத்திய இருசக்கர வாகனத்தை என்னால் அடையாளம் காட்ட இயலும் என்னிடம் காட்டப்படும் புகைப்படத்திலுள்ள இருசக்கர வாகனம் தான் அது ஆகும். (**அந்த இருசக்கர வாகனம் அடங்கிய புகைப்படம் (எண்ணிக்கை 3) அதசாஆ.3 ஆகவும், கைப்பற்றுதல் மகசரிலுள்ள இருசக்கர வாகனம் சா.பொ.2 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).** நான் அளித்த தனியறிக்கை தொடர்பாக மறுநாள் என்னை உதவி ஆய்வாளர் விசாரைண செய்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் வாகன தணிக்கைக்காக காவல் நிலையத்திலிருந்து எனது சொந்த இரு சக்கர வாகனத்தில் சென்றேன். நான் எனது இரு சக்கர வாகனத்திலும், கூட இருந்த இரண்டு நபர்கள் அவர்களது இரு சக்கர வாகனத்திலும் வந்தார்கள். இரவு 10 மணி முதல் இரவு 1 மணிவரை வாகன தணிக்கையில் ஈடுபட்டு இருந்தோம். அன்று இரவு வாகன தணிக்கையில் சுமார் 10 வழக்குகள் பதிவு செய்திருப்போம். வாகன தணிக்கை செய்த இடத்தில் ஜுவல்லரி கடைகள் அமைந்துள்ளது என்றாலும் அவற்றில் சிசிடிவி கேமரா பொருத்தப்பட்டுள்ளது என்றாலும் சரிதான். இவ்வழக்கில் சிசிடிவி பதிவேடுகளை கைப்பற்றி தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு தமிழ் தட்டச்சு செய்ய தெரியும். இரவு 11.15 மணிக்கு தனியறிக்கையை தயார் செய்து உதவி ஆய்வாளரிடம் கொடுத்தேன். தனியறிக்கையை எந்த எழுத்துரு (font) வில் டைப் செய்தேன் என்றால் ஞாபகமில்லை, எனக்கு எந்தெந்த எழுத்துருவில் தட்டச்சு செய்ய தெரியும் என்றால் ஞாபகமில்லை. Police Act 1861 பிரிவு 44 ன் படி சில ஆவணங்களை காவல் நிலையத்தில் பராமரிக்க வேண்டும் என்றால் சரிதான். வாகன தணிக்கைக்கு சென்றது பற்றியும் அங்கு நடைபெற்ற விவரங்களை பற்றி பொது நாட்குறிப்பேட்டில் குறிப்பிட்டு அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆஜர்

எதிரி மீது முன் வழக்கு ஏதும் இல்லை என்றால் அது பற்றி தெரியாது. நான் வாகன தணிக்கையில் ஈடுபட்ட போது லீனா என்பவர் தனது கணவருக்கு எதிராக புகார் அளித்தாரா என்றால் ஞாபகமில்லை. நான் என்ன பணி செய்தேன், என்ன பணியை எதிரி தடுத்தார், அதன் காரணமாக என்ன பணி தடைபட்டது என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் எனது வாகன சோதனை பணி தடைபட்டது. எதிரி என்னை அசிங்கமான வார்த்தையால் பேசியபோது அங்கு பொது மக்கள் யாரும் இல்லை என்றால் சரியல்ல, அங்கு பொது மக்கள் சென்று வரும் பகுதியாகும். சம்பவத்தின்போது அங்கு 4-5 நபர்கள் இருந்திருப்பார்கள். அவர்களில் யார் பார்த்தார்கள் என்று நான் குறிபபிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். ஆஜர் எதிரியை சுமார் 7 நிமிடம் சம்பவ இடத்தில் விசாரணை செய்திருப்பேன். அந்த 7 நிமிடத்திற்கு பிறகு தான் எதிரி அங்கிருந்து சென்றுவிட்டார் என்றால் சரிதான். கணவன் மனைவி பிரச்சனை சம்பந்தமாக எதிரியின் மனைவி காவல் நிலையத்தில் புகார் அளித்தார் என்றாலும் அதன் காரணமாக எதிரி மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றல் சரியல்ல. நான் கொடுத்த தனியறிக்கை என்னால் தயார் செய்யப்பட்டது அல்ல என்றாலும் எனக்கு தட்டச்சு செய்ய தெரியாது என்றாலும சரியல்ல. நான் இரவு 1 மணி வரை வாகன தணிக்கையில் இருந்து விட்டு இடைப்பட்ட நேரத்தில் புகார் அளித்திருக்க முடியாது என்றாலும் சரியல்ல. என்னை எதிரி மிரட்டியது உண்மையாக இருக்கும் பட்சத்தில் அருகிலுள்ள சிசிடிவி காட்சிகளை கைப்பற்றி தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. பொய்யான வழக்கு என்பதால் அங்கிருந்த பொதுமக்கள் யாரையும் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல, எதிரிகக்கம் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல

**(மறு விசாரணை இல்லை)**

ஒம்/- முருகவேல்

திறந்த நீதிமன்றத்தில் வழக்கறிஞர்கள் முன்னிலையில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லப்பட்டு உடனுக்குடன் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சியால் சரியாக உள்ளது என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

SENTHIL KUMAR R
Digitally signed by SENTHIL KUMAR R
Date: 2025.11.17 12:47:26 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,
கும்முடிப்பூண்டி